DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.177/2017**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | |
|---|---|
| Name | : சந்திரசேகரன் |
| Father/ Husband Name | : சேது |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 29.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 18.12.2016-ம் தேதி ஆறாவயல் காவல்நிலையத்தில் நான் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது 18.00 மணிக்கு அரசு மருத்துவமனையில் கிடைத்த தகவலை பெற்று அரசு மருத்துவமனைக்கு சென்று புகார்தாரர் கொடுத்த புகார் மனுவை பெற்று 20.15 மணிக்கு நிலையம் முதல் தகவல் அறிக்கை கு.எண்.124/2016 இதச. பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(2) ஐபதிவு செய்தேன். **( மேற்படி புகார் மனு அ.சா. ஆ.4 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதன்பின்னர் மறுநாள் காலை சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சிகள் 5 மற்றும் 6 முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**2.** பின்னர் காயம் பட்ட அஜித்குமாருக்கு சிசிச்சை அளித்த மருத்துவர் செங்கதிரை விசாரித்து காயச் சான்றிதழ் பெற்று வாக்குமூலம்

பதிவுசெய்தேன். புலன்விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. இந்த வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்திற்கு போன் மூலமாக தகவல் கிடைத்தது. முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நேரம் 20.15 மணி என்று குறிப்பிடப்பட்டது என்றால் அது முதல் தகவல் அறிக்கை போடப்பட்ட நேரம். இந்த வழக்கு சம்பந்தமாக அரசு மருத்துவமனையில் புகார்தாரர் புகாரை எழுதி என்னிடம் கொடுத்தார். மேற்படி புகாரில் அவர் இருசக்கர வாகனத்தில் இருந்து விழுந்து விட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம்.

2. மேற்படி புகாரில் 4 பேர் மீது நடவடிக்கை எடுக்க சொல்லி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். விசாரணையில் புகார்தாரர் என்னிடம் தன் அம்மாவிடம் உண்மையை சொல்லவில்லை என்றும், தன் நண்பர்கள் தான் கூறியதாக சொல்லியுள்ளார். புகார்தாரர் என்னிடம் விசாரணையில் அவருடைய அம்மாவுக்கு தெரிய வந்த பிறகு தான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். மருத்துவரிடம் தனது இருசக்கர வாகனத்தில் சென்ற போது கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

3. சம்பவ இடத்தில் வைத்து நான் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகாரை சரியாக புலன்விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக எதிரி மீது வழக்கு தாக்கல் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் புகார்தாரர் அவருடைய நண்பர்களுடன் இரு சக்கர வாகனத்தில் சென்றபோது நிலை தடுமாறி கீழே விழுந்ததில் ஏற்பட்டது என்றும் அதை வைத்துக் கொண்டு புகார்தாரரிடம் வேறு விதமாக புகார் எழுதிப் பெற்று எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.